(4) அறிக்கை அளித்தல்.

1968–69 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு கணர்குகளின் மீதான பொது கணக்காய்வுக் குழுவின் அறிக்கை.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I rise to present the report of the Committee of Public Accounts on the accounts of the State of Tamil Nadu for the Year 1968–69.

(5) அறிவிப்புகள்.

(அ) பொதுக் கணக்காய்வுக்குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1972–73 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு (Public Accounts Committee) தமிழ்நாடு சட்டப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன் :—

1 திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி.
2 திரு. பி. வெங்கடசாமி.
3 திரு. எம். சுரேந்திரன்.
4 திரு. ஜே. ஜேம்ஸ்.
5 திரு. கே.எம். சுப்பிரமணியம்.
6 திரு. குழ. செல்லையா.
7 திரு. வீ. இராசகோபால்.
8 திரு. அ. இராசமாணிக்கம்.
9 திரு. திருச்சி வ. கிருஷ்ணமூர்த்தி.
10 திரு. ஆ. பரந்தாமன்.
11 திரு. மே.சி. தூயமணி.
12 திரு. சி. பழனிச்சாமி.
13 திரு. வீ. மலைக்கண்ணன்.
14 திரு. எம். தேவராசன்.
15 திரு. வா. மை. அப்துல் ஜப்பார்.
16 திரு. மணலி சி. கந்தசாமி.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1972–73-ம் ஆண்டு பொதுக்கணக்காய்வுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் (முதல் அமைச்சர்) அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக் குழுவின் உறுப்பினர்களாவர்.

இப் பேரவையின்கீழ் 174-ஆவது விதியின் கீழ் திரு. மணலி சி. கந்தசாமி அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(ஆ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மற்றொரு அறிவிப்பு.

1972–73-ம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) தமிழ்நாடு சட்டப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன் :—

1 திரு. கே. எஸ். கோதண்டராமய்யா.
2 திரு. எம். முத்தையா.
3 திரு. என். டென்னிஸ்.
4 திரு. மு. சத்தியமூர்த்தி.
5 திரு. க. சுப்பு.
6 திரு. எஸ். முருகையன்.
7 திரு. சு. துரைசாமி.
8 திரு. வி. சா. இளஞ்செழியன்.
9 திரு கே. ஆர். கிருஷ்ணன்.
10 திரு. டி.சி. திம்மராய கவுண்டர்.
11 திரு. ரா. ரா. முனுசாமி.
12 திரு. பழனிவேல்ராஜன்.
13 திரு. இ. எஸ். தியாகராசன்.
14 திரு. சோ. கருணைநாதன்.
15 திரு. நா. வெ. குருசாமி.
16 திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1972–73-வது ஆண்டு மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் (முதல் அமைச்சர்) அவர்களும், பொதுக் கணக்காய்வுக் குழுவின் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக் குழுவின் உறுப்பினர்களாவார்.

இப் பேரவையின் 165–வது விதியின்கீழ் திரு. பழனிவேல்ராஜன் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(இ) சட்டமன்ற மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்திகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மற்றொரு அறிவிப்பு.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்திகள் வரப்பெற்றன என்பதை இப் பேரவைக்கு அறிவிக்கின்றேன்:—